B.N.C.A. பிரசாரம் நெ. ௧௨ ரௌத்ரி ஹு மாசி ௴

பெண்விலைக் கண்டனச் செய்யுட்கள்.

இயற்றியவர்
ராய. சொக்கலிங்கம்.
காரைக்குடி.

உ

சிவமயம்.

முகவுரை.

பண்டைக் காலத்தில் நந் தமிழ்நாட்டை நீதி தவிராது அரசாண்ட சோழ பாண்டியர்கட்கு மணிமுடி சூட்டுதல் ஆதிய பெருமையைப் பெற்றும், பிச்சைக் காரனுக்கு முத்து இடுதல் வெள்ளிக்கதவை அரசன் வாங்கிவிட அக்கணமே பொற்கதவு நாட்டுதல் செல்வப்பெருக்கத்தால் செலவிட இடமின்றிக் கருங்கடலில் தங்கக்கட்டிகளைத் தள்ளுதல் ஆதிய செல்வத்தையுற்றும், கட்டுக்கடங்காக்காவிரிப் பெருக்கையும் அடைக்கக் கூடிய கணக்கற்ற பஞ்சுவியாபாரம் ஆதிய வியாபாரப் பெருக்கையடைந்தும், ஐந்துவயதுள்ள ஒருபெண்ணை அரசன் எடுத்துச்சென்றதற்காக அந்தப்பெண்ணின் சுற்றத்தார் மாத்திரம் அல்ல சமூக முழுமையும் உயிரையும் தியாகம் செய்து மானம் ஒன்றையே பிரதானமாகக் காப்பாற்றியும் வந்த நந் தனவணிகசமூகத்தில், சிலவருஷங்களாக, உலகத்தில்எந்தப் பாகத்திலும் எந்த சமூகத்திலும் இல்லாத-நம் புண்ணிய நாட்டிற்கு, சிறப்பாக நந் தனவைசியசமூகத்திற்கு சிறிதும் ஒவ்வாத-அறிஞர்கள் போற்றத் தகாத-மனிதர்கள் விரும்பத்தகாத-பெற்றெடுத்து வளர்த்த பெண்மகவை மணமகனிடத்தில் "விலை வாங்கிக்கொண்டு விற்பது" என்ற ஒரு இழிந்த தொழிலைச் சிலர் செய்து வருதல் கண்டு, நந்தரும சமூகத்தினின்றும் இத்தொழிலை நீக்குதற்குன்னிப் பல துறைகளிலும் இடைவிடாது நஞ் சமூகத்தார் உழைத்துவருதல் உலகமறிந்த விஷயமே. எந்த விதத்திலாவது இதை நிறுத்திச் சமூகத்தைப் புனிதப்படுத்தவேண்டும் என்பதே எங்களுடைய எண்ணம். பல விதத்திலும் இடித்துஇடித்து உரைத்தாலாவது மானக்குலத்திற் பிறந்ததை மறந்து ஈனத்தொழிலைக் கைக்கொண்ட சகோதரர்கள் திருந்துவார்கள் என்ற எண்ணங்கொண்டு செய்யுள் மூலமாகவும் கூறவேண்டு

மென்று எண்ணி, சில செய்யுட்கள் யாத்து "ஊழியன்" ௭-வது இதழில் வெளியிட்டுள்ளேன். அதனுடன் இன்னும் சில செய்யுட்கள் சேர்த்து ஒரு புத்தகமாக வெளியிடவேண்டுமென்று "பர்மா நாட்டுக் கோட்டைச்செட்டியார் அசோசியேஷன்" காரியதரிசியாகிய சகோதரர் ஸ்ரீமான். பழனியப்பா அவர்கள் விரும்பியபடி முன் வெளியான ஆறு செய்யுட்களுடன் தற்போழ்து பதினான்கு செய்யுட்கள் சேர்த்து இருபதாக்கி யிருக்கிறேன். சமூகநன்மை கருதி இதனை அச்சிட்டு இனமாக வழங்கும் மேற்படி சங்கத்தாருக்கு எனது மனமார்ந்த நன்றி யறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இதனை உணர்ந்தாவது பெண்ணை விற்கும் சகோதரர்கள் திருந்தி சமூகத்திற்கு இழுக்கு இல்லாது செய்வார்கள் என்ற எண்ணத்துடன் இச்செய்யுட்கள் யாத்ததே யன்றி அவர்களைப் புண்படுத்தவேண்டுமென்ற நோக்கமல்ல. அங்ஙனமே, சகோதரர்கள் அதனை அறவே விடுத்து சமூகத்தைப் புனிதப் படுத்துமாறு இறைவன் திருவருள் புரிவாராக.

இங்ஙனம்.

ராய. சொக்கலிங்கம்.

காரைக்குடி.

உ

சிவமயம்.

பெண்விலைக் கண்டனச்

செய்யுட்கள்.

காப்பு.

எவ்வையாப்பு மிக்கபுகழ் மேவு தனவணிகர்
பண்விலையின் கண்டனத்தைப் பேசவே—பண்ணுமையாள்
மைந்த! திரு மான்மருக! வள்ளிகண வன்றனையே!
ந்திமுக! நின்னருள் சரண்.

(இவை ௧௦ செய்யுட்களும்,
பெண் விற்பாரை நோக்கிக் கூறியன.)

இருந்தனங்கள் மிகப்படைத்தோர் எத்தனைபேர்
இவ்வுலகில் இருந்தார்; இன்றி
வருந்திவருவோர்க்குநிதி மாறாது
மாரியென வழங்கும் வள்ளற்
பெருந்தகைமை மிக்கார்கள் எத்தனைபோ
பேரிருந்தார்; பிச்சை கேட்க
அருந்தரளம் அளிக்கொடுக்க ஆயிழைபோன்
ஒருண்டோ? அறைகுவீரே. (க)

இத்தகைய பெருந்துறைசேர் எழின்மாதின்
திருக்கணவன் இறும்பூ தோடு
நித்தியமும் வளர்செல்வப் பெருக்கத்தாற்
குபேரனும்வெந் நிட்டே யோடக்
கத்துகடல் தனிற்பொன்னை யிட்டவெங்கள்
சிங்கனெனுங் கனவான் வந்த
நத்துகுலந் தனில்வந்தும் நங்கையைவிற்
றுயிர்வாழ்தல் நன்றோ? சொல்வீர். (௨)

கரைபுரண்டு வந்தபெருங் காவிரியாற்
றுப்பெருக்கைக் கலங்கா துள்ளம்
திரைதிரைபஞ் சுப்பொதியை மேருவெனக்
குவித்தடைத்து நேரின் றென்னத்
கரைபுகழ்ச் சோழனுக்குத் தனிமகுடம்
புனைந்ததன வணிகர் தங்கள்
மரபுதித்து மதியின்றி மங்கையைவிற்
றுயிர்வாழ்தல் மாண்போ? சொல்லீர். (௩)

மன்னவன் பண்டைநாள் வண்கதவு
வெள்ளிதனை வாங்க, அன்றே
என்மலியுஞ் செம்பொன்னால் இருங்கதவு
தனைநாட்டி எவரும் போற்றச்
சொன்மலியத் திருமணத்திற் றூண்பவளத்
தால்நாட்டும் தூய்மை வாய்ந்த
பொன்மலியுங் குலத்துதித்தும் பூவையைவிற்
றுயிர்வாழ்தல் புகழோ? பேசீர். (௪)

தலைகொடுத்தல் பெரிதென்பர் உலகத்தோர்;
ஒன்றல்ல; தங்கள் எட்டுத்
தலைகொடுத்த தக்கபுகழ்த் தனவணிகர்
குலத்துதித்துந் தையல் தன்னை
விலைகொடுத்துக் கொள்வோர்க்கு விற்றுமனஞ்
சற்றிரங் காமல், ஐயோ!
குலங்கெடுக்க வந்ததொரு கோடரிக்காம்
பாகின்றீர்; கொடுமை யீதால். (௫)

மழைத்தகுழ லாம்பையரை மன்சிறையி
விடமாயின் மானம் காப்பான்
தழைத்தகுலந் தொழிமாண்ட தனவணிகர்
குலத்துதித்துந் தரணி மீது
பிழைக்கவழி யறியாது பெண்மகவை
விற்றுண்ணும் பேடி காள்நல்
ஒழுக்கமுயர் குணமறிவும் உடையோர்கள்
உமைக்காண ஒருப்படாரே. (௬)

திருமலியக் காவிரிப்பூம் பட்டினத்தில்
இனிதுறையுஞ் செய்தி கேட்டுத்
தருமநெறி தவிராது மதுரைநகர்
தனையாண்ட தமிழர் கோமான்
பெருமைபெற இனிதழைக்கப் பெரும்பாண்டி
வளநாடு பெற்ற எங்கள்
தருமகுலந் தனில்வந்துந் தையலைவிற்
றுயிர்வாழ்தல் தகவோ? சாற்றீர். (௭)

கடல்வணங்குங் கழற்காலான் கற்பகநாட்
டிறைமையோடு ககன மேவித்
திடமொடுசிங் காசனத்திற் சீர்பெறவீற்
றிருந்தாரம் பூண்ட செம்மல்
அடல்வழுதி தனக்குமணி முடிபுனையும்
அருங்குலத்தில் அவதரித்தும்
மடவரலை விற்றுலகில் மதியின்றி
உயிர்வாழ்தல் மாண்போ! சொல்வீர். (அ)

மண்ணாளு மன்னர்புகழ் வயவீரர்
குலத்துதித்து மதியி லாமற்
கண்ணான பெண்மகவைக் கைப்பொருளுக்
கீவீர்காள்! கடவுள், சுற்றும்
உண்ணாணம் அறிவொழுக்கம் உயர்ச்சியொடு
மானமிலா உங்கள் தம்மைப்,
புண்ணான நிரயிற் புகுவிப்பார்;
இதுசரதம்; பொய்ம்மை யன்றே. (௯)

அன்னமிடுஞ் சத்திரங்கள் ஆலயங்கட்
டல்தம்மை அடைந்தோர் யார்க்கும்
கன்னியரை மணமுடித்தல் கல்விச்சா
லைகணாட்டல் கற்றோர் போற்றும்
என்னதரு மங்களான அவையாவும்
புரிவணிகர் இருங்குலத்தில்
பொன்னரிய மங்கையைவிற் றுயிர்வாழும்
புன்மையென்னே! பொருகுவீரே. (௧௦)

(இவை க௦ வேலவனை நோக்கிக் கூறியன.)

தலங்கடோறும் போய்ப்பணிந்து தவம்புரிந்து
பலதீர்த்தம் தன்னி லாடி
நலங்களுயிர்க் களவின்றி நல்குநின
தடிமலரை நயந்து போற்றி
இலங்குமெழிற் பெண்மகவை ஈன்றவளார்த்
தெடுத்துமதி யின்றி, யையோ!
விலங்குகளைப் போல்விற்பார் வீழ்நரகென்?
வேலவனே! விளம்பு வாயே. (கக)

கொலைகளவு கட்காமம் பொய்யெனுமைம்
பெரும்பாவம் குடிகொண் டார்க்கும்
கலையிலா மாந்தருக்கும் கண்ணியமில்
லாமூடக் கயவர் கட்கும்
நலமொடுபெற் றெடுத்துப்பண் ணொட்காத்த
நங்கைதனை நலமொன் றின்றி
விலைகருதி விற்றிடுவார் வீழ்நரகென்?
வேலவனே! விளம்பு வாயே. (கஉ)

பெற்றதாய் தந்தையர்கள் பிரியமுடன்
பெற்றெடுத்த பெண்ணை நன்றாய்க்
கற்றவனும் நல்லொழுக்கம் காருண்யம்
மிக்கானும் கவினுள் ளானும்
நற்றுணைவ னொருவற்கு நல்காது
தம்வருவாய் நாடி, அந்தோ!
விற்றிடுவார் வீழ்நரகென்? வெற்றிபெறு
வேலவனே! விளம்பு வாயே. (கங)

தாதைமக வுக்காற்றுந் தன்மைமறந்
தன்பின்றித் தந்நலத்தின்
மீதுகவ னஞ்செலுத்தி மிக்கபொருள்
மணமகன்பால் வேண்டிப், பெற்ற
மாதைவிலை பேசிவிற்று வாணாளெல்
லாம்வருந்த வைக்கு மாயப்
பாதகர்கள் வீழ்நரகென்? பன்னிருகை
வேலவனே! பகரு வாயே. (௧௪

மக்களுயிர் வாழ்தற்கு மாண்டொழில்கள்
பலவிருக்க, மரபிற் கேற்ற
தக்கதொழில் புரியாது, தருமமுறை
பாரதநந் தரணி தன்னில்,
எக்குலத்தும் இல்லாத, ஏந்திழையை
விற்றுண்ணும், இழிவு பூண்டு
மிக்கவசை யேயடைவார் வீழ்நரகென்?
வேலவனே! விளம்பு வாயே. (௧௫)

அங்கமெலாம் நொந்திடநா லாறுமதி
தான்சுமந்தும் அடைவே பெற்றும்
கொங்கையமு தங்கொடுத்துங் குழல்வாரிப்
பொட்டிட்டுங் கோதி லாது
செங்கனிவாய் மழலைமொழி செவிமடுத்துஞ்
சீராட்டுந் திருவை யொத்த
நங்கையைவிற் பார்வீழும் நரகென்ன?
வேலவனே! நவிலு வாயே. (௧௬)

நன்கிளைஞ ரோடிருந்த ஞாலமெலாம்
தமைப்போற்ற நயந்து பெற்ற
அன்னநடை அரம்பைதனை அறிவுகுண
மிக்கோற்கே அளித்தி டாது
பொன்னதிகம் ஈவோற்குப் பிறிதொன்றும்
பாராது புவியில் விற்கும்
தன்மரபின் சால்பறியார் சார்நரகென்?
வேலவனே ! சாற்று வாயே. (க௭)

வீதியிலே யாடிவரு மென்குதலை
மொழிமாது மின்னை யொத்த
காதலுறு தம்மகளைக் காசினியெ
லாமறியக் கடனுக் காக
நீதியறி யாதுலகில் நீசர்களைப்
போல்விற்கும் நேர்மை யில்லாக்
காதகர்கள் வீழ்நரகென்? கருணைபுரி
வேலவனே! கழறு வாயே. (க௮)

பண்டுமக வின்றதற்குப் பலர்க்குஞ்சர்க்
கரைபழங்கள் பண்பாய்த் தந்தும்
கண்டவுட னம்மகவைக் கனபிரிய
மொடுமடியிற் கவின வைத்தும்
கொண்டதையெ லாமறந்து கூர்த்தமதி
யில்லாதாட் கொல்லிப் பித்துக்
கொண்டவர்கள் போம்நரகென்? குன்றெரிந்த
வேலவனே! கூறு வாயே. (க௯)

பண்டாரு மதிசாதிக்கப் பணிமுடிப்பார்
வேந்தரெலாம் படியிற் போற்றத்
தண்டாமரைத்தேவி தனிநடஞ்செய்
தக்ககுலந் தன்னில் வந்தும்
வண்டாருங் குழலிற்று மாபிற்கே
வசைதேடும் மான மில்லாச்
சண்டாளர் சார்நரகென்? சக்திவடி
வேலவனே! சாற்று வாயே. (௨௦)

தனவைசிய ஊழியன் பிரஸ், காரைக்குடி. 67-3500-21.